THE HON. THIRU K. A. MATHIALAGAN: I entirely agree with the hon. Member that there should not be any harassment. Government are not aware of any kind of harassment. If any specific instance of harassment is brought to their notice, Government will certainly look into it.

திரு. பி. ஜி. கருத்திருமன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்படியான சந்தர்ப்பத்தில் சென்ற அரசாங்கத்தை விட இந்த அரசாங்கம் கெட்டிக்காரத்தனமாக வரி வசூல் செய்திருப்பதாகச் சொன்னார்கள். குறள் வழியில் நின்று ஆட்சி செய்யும்படியாகச் சொல்லிக்கொள்கிற இந்தச் சர்க்கார், "வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும், கோலொடு நின்றான் இரவு" என்பதற்கேற்ப நடந்துகொள்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: வேலொடு நின்றவன் கொள்ளைக்காரன். இந்த அரசு கொள்ளைக்காரன் இல்லை அப்படிப்பட்ட கடுமையான, பயங்கரமான கொள்ளைக்காரனைச் சித்தரிக்க அவசியம் இல்லை. ஜனநாயக அமைப்பில் இவைகள் எல்லாம் தவிர்க்க முடியாத கடமைகள். அரசு நியாயமான முறையில்தான் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் "வேலொடு நின்றான்" என்பதைக் குறிப்பிட்டார்கள். விற்பனை வரி என்ற வேலையே வடித்துக்கொடுத்தது பழைய காங்கிரஸ் ஆட்சிதான். (சிரிப்பு)

திரு. பி. ஜி. கருத்திருமன்: காங்கிரஸ் ஆட்சி கொடுத்ததையே இந்த அரசு எடுத்துப் பின்பற்றிச் செல்வதற்கு நன்றி.

கோவை நகரை 'பி' பிரிவாக்குதல்.

*55 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரத்தை 'பி' பிரிவு நகரமாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எந்தத் தேதி முதல் அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) & (இ) நகரங்களின் அந்தஸ்தை நிர்ணயிக்கக்கூடிய அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்குத்தான் இருக்கிறது. நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பாக மத்திய அரசு நகரங்களை 'ஏ' பிரிவு, 'பி—1' பிரிவு, 'பி' பிரிவு என்பதாகப் பிரித்து, 'ஏ' பிரிவு, 'பி—1' பிரிவு ஆகிய நகரங்களில் உள்ள மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு எல்லாம் சிட்டி காம்பென்சேடரி அலவன்சு வீட்டுவாடகைப்படி உண்டென்றும். 'பி' பிரிவு நகரங்களில் உள்ளவர்களுக்கு வீட்டு வாடகைப்படி உண்டென்றும் தெரிவித்தார்கள். அப்போது சென்னை நகரைக்கூட 'ஏ' பிரிவு நகரமாக அறிவிக்கவில்லை. கோவையைப் பொறுத்தவரையில் 'ஸி' பிரிவாக

இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் சென்னையை 'ஏ' பிரிவாக மாற்றவேண்டும் என்கிற முயற்சியை எடுத்துக்கொண்டது மக்கள் கருத்து திரட்டப்பட்டது. பாராளுமன்றத்தில் கழக உறுப்பினர் திரு. மனோகரன் அவர்கள் தீர்மானம் கொடுத்தார்கள். அதன் அடிப்படையில் அப்போது நிதி அமைச்சராக இருந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் சுற்றுப்புற நகரங்களை எல்லாம் சேர்த்து சென்னையை 'ஏ' பிரிவு நகரமாக ஆக்கினார்கள். மதுரை 'பி' பிரிவாக ஆக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இங்குள்ள அரசாங்கச் சிப்பந்திகளுக்கு அலவன்ஸ்சு கிடைக்கிறது. கோவை நகரமும் 'பி' பிரிவாக ஆக்கப்படுவதற்கு எல்லா அம்சங்களும் இருக்கின்றன. ஆயினும் நகரசபை உரிமையாளராகிய முனிசிபாலிட்டி கணக்கு குறைவாக இருப்பதால் ஆக்க முடியவில்லை. அந்தக் கணக்கு சரியானதும் அல்ல. ஆகவே இதனை வற்புறுத்தி கோவையைச் சுற்றியுள்ள புற நகரங்களையும் இணைத்து அதை 'பி' பிரிவாக ஆக்கவேண்டும் என்பதை இந்த அரசு மத்திய அரசுக்கு வற்புறுத்தித் தெரிவிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சு. துரைசாமி : கோவை 'பி' பிரிவு நகரமாக அறிவிக்கப்படாத காரணத்தினால் அங்குள்ள மத்திய அலுவலக ஊழியர்களுக்கும் சரி, மாநில ஊழியர்களுக்கும் சரி, எல்.ஐ.சி. ஊழியர்களுக்கும் சரி, நகர ஈட்டுப்படி, வீட்டுவாடகைப்படி போன்றவை கிடைக்காது இருக்கிறது. அது 'பி' பிரிவு நகரமாக ஆக்கப்பட வேண்டிய எல்லா அம்சங்களும் இருப்பதனால் உடனடியாக அதை 'பி' பிரிவு நகரமாக—புற நகரங்களையும் சேர்த்து—ஆக்குவதற்கு மத்திய அரசுக்கு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைத்தான் நான் சொன்னேன். அவர்களுடைய கணக்குப்படி மதுரை நகரத்திலே முனிசிபாலிட்டியிலேயே ஜனத் தொகை அதிகமாக இருக்கிறது. கோவையை எடுத்துக் கொண்டால் புற நகரங்களான சிங்கநல்லூர், பீளமேடு போன்ற பகுதிகளைச் சேர்த்தால் வருகிறது. சென்னை நகரத்தை 'ஏ' நகரமாக ஆக்காமல் முன்பு வைக்கப்பட்டு இருந்ததே அதைப்போல்தான் கோவை நகரமும் வைக்கப்பட்டு இருக்கிறது. அதையும் உயர்த்தவேண்டுமென்ற உறுப்பினரின் அனுதாப உணர்ச்சியை இந்த அரசு மிகுந்த ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டு அதை மத்திய அரசுக்கு வற்புறுத்தும். அதிலே வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

Small Savings Cultural Show,

* 56 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the expenditure incurred by the Government in connection with the Small Savings Cultural Show held at Madras on 25th February 1968; and

(*b*) the amount realised from the show?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) சென்னை மாநகரில் 25—2—1968 அன்று நடந்த சிறு சேமிப்பு கலைவிழாவிற்காக சுமார் ரூ. 35,900 அரசாங்கத்தால் செலவிடப்பட்டது.